RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 22 | ஜனவரி.29 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# அரசியல் பேசாத திருமண மேடை: திருச்சியில் மலரும் நினைவுகளில் மூழ்கிய முதல்வர் ஸ்டாலின்!

திருச்சி: ஜன.29-

திருச்சியில் திமுக முன்னாள் எம்எல்ஏ பரணிகுமார் இல்ல திருமண விழாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைத்து பரணிகுமாருடன் தன்னுடைய கடந்த கால நிகழ்வுகளை நினைவு கூர்ந்து பேசியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் திருச்சி முன்னாள் நகர்மன்ற தலைவர் பாலகிருஷ்ணனின் பேரனும், முன்னாள் திமுக எம்எல்ஏ பரணிகுமாரின் மகனுமான ஆதித்யா பாலா மீனாட்சி ஆகியோரின் திருமணத்தை முதல்வர் ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ், மதிவேந்தன், முதல்வரின் மனைவி துர்கா, மகள் செந்தாமரை, மருமகன் சபரீசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

திருமணத்தை நடத்தி வைத்த பின் முதல்வர் ஸ்டாலின் மணமக்களை வாழ்த்தி பேசியதாவது: ”எல்லோரும் சொன்னது போல, திமுக வளர்வதற்கு, நம்முடைய இரு வண்ணக்கொடி இந்த வட்டாரத்திலே பரவுவதற்கு, காரணகர்த்தாக்களில் ஒருவராக இருந்தவர் நம்முடைய அருமை பெரியவர் பாலகிருஷ்ணன். அவர் இன்றைக்கு இல்லை என்று சொன்னாலும், அவருடைய அருமை மகனாக இருக்கக்கூடிய பரணிகுமார், அவர் விட்டுச் சென்றிருக்கக்கூடிய பணிகளையெல்லாம் எந்த அளவிற்கு இந்த இயக்கத்திலேயே தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றி இருக்கிறார் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

பாலகிருஷ்ணனை பொறுத்தவரை சொல்ல வேண்டும் என்று சொன்னால் அண்ணாவோடு, கருணாநிதியோடு, மறைந்த நம்முடைய பொதுச் செயலாளராக இருந்து மறைந்த பேராசிரியரோடு, அதேபோல அன்பிலாரோடு எப்படி நெருக்கமாக இருந்தார் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

அவர் மாவட்டக் கழகத்தினுடைய பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கட்சியிலேயே சிறப்பாக பணியாற்றி இருக்கிறார். திமுக சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும் இருந்து தன்னுடைய கடமையை நிறைவேற்றி இருக்கிறார்.

நேரு சொன்னது போல, எங்கும் வெற்றி பெற முடியாத நிலையிலேயே திருச்சி நகராட்சி மன்ற தலைவராக அன்றைக்கு பெருவாரியான வாக்கு வித்தியாசத்திலே வெற்றி பெற்று அவர் இந்த வட்டாரத்திலேயே, இந்த நகராட்சிக்கு, திருச்சி மாநகரத்திற்கு பொதுமக்களுக்கு எப்படியெல்லாம் பணியாற்றி இருக்கிறார், கட்சிக்கு எப்படியெல்லாம் தொண்டாற்றி இருக்கிறார் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். ஆக அப்பாவிற்கு தப்பாமல் பிள்ளையாக நம்முடைய பரணிகுமார் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.



பரணிகுமார் மாணவர் அணியிலே முதலில் பொறுப்பேற்று பணியாற்றினார். அதைத் தொடர்ந்து இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து கடமையை நிறைவேற்றி இருக்கிறார்.

தேர்தல் வேலையை எப்படியெல்லாம் ஆற்றி இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். நான் பரணிகுமாரை பற்றி சொல்ல வேண்டும் என்று சொன்னால், இங்கே எல்லோரும் சொன்னார்கள். என்னோடு 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் என்னோடு சுற்றுப் பயணம் ஈடுபடுகிற போதெல்லாம் திருச்சிக்கு மட்டுமல்ல தமிழகம் முழுவதிலும் இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களுக்கும் அவர் சுற்றுப் பயணத்திலே என்னோடு கலந்து கொண்டிருக்கிறார்.

மறைந்த என்னுடைய ஆருயிர் நண்பன் பொய்யாமொழியும் நம்முடைய பரணிகுமாரும் தான் எனக்கு துணையாக சுற்றுப்பயண நிகழ்ச்சிகளுக்கு வருவார்கள், தொடர்ந்து வருவார்கள்.

சுற்றுப்பயண நிகழ்ச்சிக்கு மட்டுமல்ல என்னுடைய காரை அவர்தான் ஓட்டி வருவார். அவங்க அப்பாவோட கார் எடுத்துட்டு வந்துருவார். அந்த காரில்தான் தமிழ்நாடு முழுவதும் நான் சுற்றுப்பயணத்தை நடத்தி இருக்கிறேன். அவரோடு பயணம் செய்த போது எந்தவித அச்சமும் இல்லாமல் பயணம் செய்ய முடியும். இரவிலே விழித்துக் கொண்டிருப்பான், பகலில் தூங்குவார். இது எல்லாருக்கும் தெரியும், அதிகமா சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இரவிலே அசோக் குமார் இங்க வந்திருக்கிறார், அசோக் குமாருக்கு எல்லாம் தெரியும். ஏனென்றால் நாங்களெல்லாம் ஒரு செட் அப்போ. இளைஞரணி தொடங்கிய நேரத்தில் அப்பொழுது தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் நடத்துகிற நேரத்தில் அவர்தான் கார் ஓட்டிக்கொண்டு வருவார். அந்த கார் ஓட்டிக்கொண்டு வருவது பல நிகழ்ச்சிகள் எனக்கு அனுபவம் உண்டு.

நான் பல இடங்களிலே கழகக் கொடி ஏற்றுவதற்காக காரை விட்டு இறங்கி நான் பல கிராமங்களில் கொடி ஏற்றுவதுண்டு. அப்பொழுது அவர் காரிலே உட்கார்ந்திருப்பார். காரைச் சுற்றி தாய்மார்கள், சில பெரியவர்கள் எல்லாம் சுற்றி சூழ்ந்து நின்று கொண்டிருப்பார்கள். அப்பொழுது பரணியைப் பார்த்து சில பேர் பேசிக் கொண்டிருப்பார்களாம். நான் வந்தவுடன் பரணி என்னிடத்தில் அவரே சொல்லுவார், ‘தலைவரே, நீங்க கொடியேத்தப் போயிட்டீங்க, நான் கார்ல உட்கார்ந்திருந்தேன். காரைத் திருப்பி விட்டுட்டு உட்கார்ந்திருந்தேன். ஆனா இங்க சுத்தி இருந்தவங்க எல்லாம் என்ன பேசுறாங்க தெரியுமா? பாரு அவர் எவ்வளவு ஒல்லியா இருக்கிறாரு, காரை ஓட்டுற டிரைவர் எவ்வளவு குண்டா இருக்காரு பார்த்தியா? அப்படின்னு அவரே சொல்லுவார் இதை.

எதற்காகச் சொல்லுகிறேன் என்று சொன்னால் அந்த அளவிற்கு அவர் என்னோடு இருந்து பழகியவர்கள். அதுமட்டுமல்ல சுற்றுப்பயணம் நடத்துகிற போது பல இடங்களில் நாங்கள் இரண்டு மணிக்கு, மூன்று மணிக்குத்தான் உறங்குவது, தூங்குவதுண்டு. அப்படித் தூங்குகிற நேரத்துல மறுநாள் காலை ஏழு மணிக்கு போக வேண்டும் என்ற நிகழ்ச்சி இருக்கும். அதனால சொல்லிவிட்டு தூங்குவோம், ஏழு மணிக்கு எழுப்பிவிடுப்பான்னு சொல்லுவோம். ஆனா அவரை யாரும் எழுப்ப முடியாது, நான்தான் போய் எழுப்பணும், அவர் வந்து எழுப்ப மாட்டார். அப்படித்தான் அப்படியெங்க பயணம் நடந்திருக்கிறது. ஆக அந்தப் பயணங்களெல்லாம் மறக்க முடியாது. எத்தனையோ இருக்கு, அதையெல்லாம் சொன்னா அவர் மேடையிலேயே உட்கார்ந்திருக்க முடியாது இப்போ. அதையெல்லாம் சொல்ல விரும்பல.

ஆக எதற்காகச் சொல்லுகிறேன் என்று சொன்னால் அந்தளவிற்கு ஒரு அன்போடு இருந்து பழகியவர்கள். நாங்கள் திருச்சிக்கு வருகிற போதெல்லாம் பாலகிருஷ்ணனுடைய வீட்டுக்கு, பரணிகுமார் வீட்டுக்கு நான் செல்லாமல் இருந்ததில்லை. நாங்கள் அந்த அளவிற்கு பாசத்தோடு பழகக்கூடிய குடும்பம். ஆக அந்தக் குடும்பத்திலேயே இன்றைக்கு குலவிளக்குகளாக இருக்கக்கூடிய நம்முடைய மணமக்கள் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்க எப்படிப்பட்ட நேரத்தில் வந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். தேர்தல் நெருங்கிக்கிட்டிருக்கு, இன்னும் இரண்டு மூணு மாசத்துல தேர்தல் நிச்சயமாக வரப்போகிறது. இதற்கிடையிலேயே உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன் என்று சொன்னால், அந்தக் குடும்பத்தின் மீது நாங்கள் கொண்டிருக்கக்கூடிய பாசத்தின் காரணமாகத்தான் வந்திருக்கிறோம், வேறொன்றுமில்லை. ஏற்கனவே ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் திருச்சிக்கு வந்து, தஞ்சைக்குப் போய் ஒரு மாநாட்டை நடத்தினோம் அதுவும் உங்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல மகளிர் அணி மாநாடு ஒரு பக்கம், இளைஞரணி மாநாடு ஒரு பக்கம். அடுத்து நிறைவாகத் தேர்தலுக்கு இதே திருச்சியில் 10 லட்சம் பேர் திரளக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய மாநாட்டை நம்முடைய அமைச்சர் நேரு நடத்த இருக்கிறார், அதுவும் உங்களுக்குத் தெரியும், அதை அறிவித்திருக்கிறோம்.

நாங்க தொடர்ந்து பிஸியா இருக்கிற நேரம் இப்போ. அப்படி பிஸியா இருக்கிற நேரத்தில் வந்திருக்கிறோம்னா நம்முடைய பரணிகுமார் மீது, பாலகிருஷ்ணன் குடும்பத்தின் மீது நாங்கள் வைத்திருக்கக்கூடிய பற்றின் காரணமாகத்தான், அந்த நட்பின் காரணமாகத்தான் வந்திருக்கிறோம். அந்த நட்பின் அடையாளமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய பரணிகுமார் இல்லத்தில் இருக்கக்கூடிய இந்த குலவிளக்குகள் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ வேண்டும். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய, 'வீட்டிற்கு விளக்காய் நாட்டுக்குத் தொண்டர்களாய்' மணமக்கள் வாழுங்கள் வாழுங்கள் வாழுங்கள் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்’’ என்று முதல்வர் உரை நிகழ்த்தினார்.



## செங்கல்பட்டு மாவட்டம், பொன்மார் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

பொன்மார். ஜன.29

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், பொன்மார் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (ஜனவரி : 26) அன்று ஊராட்சி மன்ற தலைவர்., எஸ். நாராயணன் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பொதுமக்கள் பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மழைக்காலங்களில் டெங்கு விழிப்புணர்வு பற்றி பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து குடியரசு தினத்தை முன்னிட்டு பொன்மார் ஊராட்சிகளில் குப்பை இல்லாத தூய்மையான ஊராட்சியாக மாற்றிக் காட்டுவோம் என்று அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.உடன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மற்றும் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி செயலர்.,காளீஸ்வரி உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை விமான நிலையத்தில் ரூ.10.7 கோடி மதிப்பிலான உயர்ரக கஞ்சா பறிமுதல்!!

சென்னை: ஜன.29-

சென்னை விமான நிலையத்தில் ரூ.10.7 கோடி மதிப்பிலான உயர்ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது . தாய்லாந்தில் இருந்து கஞ்சாவை கடத்திய இரு பயணிகளிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். கைதான இருவரும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் எனத் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. உணவுப் பொருட்களுக்குள் மறைத்து எடுக்கப்பட்டு வந்த ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

## செங்கல்பட்டு மாவட்டம், அகரம் தென் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

அகரம், ஜன.29

செங்கல்பட்டு மாவட்டம் அகரம் தென் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (26.01.26) அன்று ஊராட்சி மன்ற தலைவர்., ஜெகதீஸ்வரன் தலைமையில் ஊராட்சி மன்ற வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்.,ஏ. பிரபாகரன் நிறைவேற்றப்பட்ட பட்டியல் விவரங்களை ஊராட்சி மக்களிடம் சபையில் அனைவரின் முன்பு படித்துக் காட்டினார். இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு ஊராட்சி மன்ற தலைவரை பொதுமக்கள்



பாராட்டினார். தொடர்ந்து ஊராட்சி மக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய அடையாள அட்டையை வழங்கி இந்த அடையாள அட்டை மூலம், பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறலாம். இதில் கல்வி உதவித்தொகை, திருமண உதவி, விபத்து நிவாரணம் மற்றும் ஓய்வூதியம் போன்ற திட்டங்கள் வழங்கிய தமிழக முதல்வர், மு .க. ஸ்டாலின் பாராட்டுக்கள் தெரிவித்து சி .கே. ஜெகதீஸ்வரன் ஊராட்சி மன்ற தலைவருக்கு தூய்மை பணியாளர்கள் தங்களின் நன்றியினை தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்திய அரசு நலத்திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்

காரைக்குடி ஜன.29

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகம் மற்றும் மக்கள் தொடர்பகம் சார்பில் மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியை காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி குத்துவிளக்கு ஏற்றித் தொடங்கி வைத்து, புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்டார். இதில் மத்திய மக்கள் தொடர்பக உதவி இயக்குநர் தே. பாலநாகேந்திரன் பேசுகையில், "எதிர்காலத் தூண்களான மாணவர்கள் அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு பெறுவதுடன், அவற்றைச் சமூக வலைதளங்கள் மற்றும் நேரடித் தொடர்பு மூலம்



தங்கள் வீடுகளுக்கும், உறவினர்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும். தகுதியுள்ள அனைவரும் அரசின் பயன்களைப் பெறுவதை மாணவர்கள் உறுதி செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் வணிக மேம்பாட்டு துறை தலைவர் பழனியப்பன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மத்திய மின் வேதியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார்.

மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பிரவீன்குமார் பேசுகையில், மாணவர்களுக்கான கல்விக்கடன், விவசாயம் மற்றும் சிறுகுறு தொழில்களுக்கான வங்கிச் சேவைகள் குறித்து விளக்கினார். மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட இயக்குநர் ச. சண்முகப்பிரியா, தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கான ஊட்டச்சத்து திட்டங்கள் குறித்தும், கனரா வங்கி கிராமிய சுயவேலைவாய்ப்பு இயக்குநர் ரகுநாதன் சுயதொழில் தொடங்குவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினர்.

நிகழ்ச்சியில் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி மற்றும் காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் குணசேகரன் இருவரும் சேர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கினார்கள். இதற்கான ஏற்பாடுகளைக் கள உதவி அலுவலர்கள் போஸ்வெல் ஆசீர் மற்றும் ஜெயகணேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.





# கல்லலில் எழுத்தாளர் சங்க இலக்கியப் பகிர்வு கூட்டம்

சிவகங்கை, ஜன.29-
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க கல்லல் கிளையில் இலக்கிய கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் கவிஞர் மகா பிரபுவின் 14 நூல்கள் குறித்த கருத்துப் பகிர்வு நடைபெற்றது.

முன்னதாக கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பத்மாவுக்கு மதிப்புமிகு ஆசிரியர் விருது, டைம்ஸ் ஆப் திருப்பத்தூர் இணைய செய்தி நிறுவனர் தேவராஜனுக்கு 'சிறந்த சமூக சேவகர்' விருது வழங்கப்பட்டது.

அன்றைய தினம் வெளியிடப்பட்ட மகா பிரபுவின் பதினான்காவது நூலான "உற்சாகம்" நூலில் இடம் பெற்றிருந்த இரண்டு சிறப்பு கட்டுரைப் பற்றியும், 25 கட்டுரைகளைப் பற்றியும் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் மாணவி மாதரசி மதிப்புரை வழங்கினார்.

மகா பிரபு வின் முதல் நூலான உறவுகள் நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளையும், தனது கட்டுரையான ஆசிரியர் குறித்தும் பத்மா பேசினார். இரண்டாவது நூலான மிஸ்டர் அவசரம் என்கிற 50 நுன்கதைகள் அடங்கிய நூலைப் பற்றி சித்திரைச் செல்வி வியந்து பேசினார். மூன்றாவது நூலான வயநாடு குறித்தும், தான் ரசித்துப் படித்த கவிதைகளையும் பாலமுருகன் பகிர்ந்து கொண்டார். பட்டாசு கவிதை நூல் சரவெடியாய் இருந்தது என்ற தனது பகிர்வை கவிதை நயத்துடன் விளக்கினார் சத்தியமூர்த்தி. மகாராஜா என்ற நுண்கதை நூலில் இடம் பெற்றிருந்த 50 கதைகளில் இருந்து ஐந்து கதைகளைத் தேர்ந்தெடுத்து சுதா பேசினார். தொடர்ந்து பேசிய விநாயகமூர்த்தி மனிதம் நூலில், தான் எழுத்தாளராக அறிமுகமானது பற்றியும், நூல் தலைப்பிலான தனது கட்டுரையைப் பற்றியும், மற்ற கட்டுரைகளைப் பற்றியும் பார்வையாளர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

மெஹர் பானு டிப்ஸ் அண்ட் சிப்ஸ் என்கிற ஆங்கில நூல் குறைவான பக்கங்களைக் கொண்டிருந்தாலும் நிறைவான நூலாக இருக்கிறது. இது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளது என்பதைத் தெரிவித்தார். காசு பணம் துட்டு நூலில் தனது பங்களிப்பைப் பற்றியும், அந்த நூலில் இடம் பெற்றிருந்த கட்டுரைகள் தனது நண்பரின் மனம் மாற்றத்திற்கு எவ்வளவு உதவியது என்பதையும் வேல்முருக ன் கூறி ஆக்கப்பூ ர்வமான கட்டுரைகளைப் பாராட்டினார். மகா பிரபுவின் முதல் சிறுகதை நூலான யாரடி நீ மோகினி நூலில் உள்ள சில கதைகளைக் குறிப்பிட்ட நாகரத்தினம் எழுத்தாளரின் கற்பனைத் திறனை வெகுவாகப் பாராட்டினார். கவிஞர் சிபூ மகா பிரபுவின் மூன்றாவது கவிதை நூலான அழகி நூல் சிறந்த வடிவம் பெற்ற கவிதைகளைக் கொண்டுள்ளது என்பதை தெரிவித்ததுடன், தன்னைக் கவர்ந்த சில கவிதைகளையும் வாசித்தார்.

சவாலே சமாளி நூலில் இடம் பெற்றிருந்த கட்டுரைகளின் சிறப்பம்சத்தைப் பற்றி பாண்டியம்மாள் புகழ்ந்தார். சிதறு தேங்காய் என்ற ஹைக்கூ நூல் 220 நுட்பமான கவிதைகளை கொண்டுள்ளது என்றும், பல கவிதைகளில் நகைச்சுவையையும், சமூகப் பொறுப்பையும் வெளிப்படுத்தி இருப்பது பாராட்டுக்குரியது என்று முனைவர் உஷா தனது ஆச்சரிய முடிச்சுகளை அவிழ்த்தார். மகா பிரபுவின் விருந்து என்ற நூலில் இடம் பெற்றிருந்த கட்டுரைகளைப் படித்து தனது அனுபவத்தை அனைவருடனும் கலந்துரையாடி, எழுத்தாளரின் கட்டுரை வரிகள் ஆழமானவை என்பதை அடிக்கோடிட்டு காட்டினார் மாரீஸ் கணேசன்.

இந்நிகழ்வில் மத்திய அரசு வழக்கறிஞர் முருகேசன், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் ஆரோக்கியசாமி, திருப்பத்தூர் பாபா குரூப் பவுண்டேசன்ஸ் நிறுவனர் ஹாஜி பாபா அமீர் பாதுஷா, பள்ளிக்கல்வி துணை ஆய்வாளர் இராதாகிருஷ்ணன், கல்லல் சாந்தி ராணி பள்ளி முதல்வர் அருட்சகோதரி சுதா, ஆசிரியர் திருமலை ராஜன், ஆசிரியர் சுதாகர், புலவர் காளி ராசா, ஆசிரியர் சுதாகர், அருட் சகோதரி ரெஜினா சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

ஆசிரியைகள் நித்யா மற்றும் சீதாலட்சுமி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் பாராட்டி பேசிய மகாபிரபு, ஒவ்வொரு நூல் குறித்த தனது அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார். உற்சாகம் நூலில் தங்கள் படைப்புகளை அரங்கேற்றிய எழுத்தாளர்களுக்கும், நூல்கள் கருத்து பரிமாற்றத்தில் பங்கேற்றவர்களுக்கு ம் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

ச.மருதநாயகம் நிகழ்ச்சிக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தனர்.





# மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் மனித நேய வார நிறைவு விழா

சிவகங்கை ஜன29-
சிவகங்கை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் மனித நேய வார நிறைவு விழா நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் செல்வசுரபி வரவேற்புரை நிகழ்த்திட ஆதிதிராவிடர் நலத்துறை மாவட்ட நல அலுவலர் முத்துலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தப்பாட்டம் , மானாட்டம் , மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர்களான , திமுக ஆதிதிராவிடர் அணி மாவட்டத் தலைவர் , நலக்குழு உறுப்பினர் கொத்தமங்கலம் சேது , வீணஸ் ஃபவுண்டேஷன்ஸ் அ. பூமிநாதன் , மாவட்ட அரசு சிறப்பு குறறவியல் வழக்கறிஞர் துஷாந்த் பிரதீப் குமார் , மானாமதுரை நகர்க்கழக செயலாளர் க. பொன்னுச்சாமி , மாவட்ட தொணடரணி துணை அமைப்பாளர் புலிக்குட்டி, கவிஞர் தமிழ்க்கனல், நகர்மன்ற உறுப்பினரகளான பாலாஜி, இளைஞரணி செல்வக் குமார் , வழக்கறிஞர்களான முருகன், கிருஷ்ணன், பிச்சை, ராஜூ, செல்வ ராணி, ஆறுமுகம், சேவு கன் உள்ளிட்ட மாணவ மாணவியர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்




■ வேலூர் மாவட்டத்தில் திருக்குறள் வார விழாவின் ஒரு பகுதியாக திருக்குறள் சார்ந்த போட்டிகளை மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி, நேற்று டி.கே.எம் மகளிர் கலைக்கல்லூரியில் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்ச்செம்மல் புலவர் வே.பதுமனார். இணை இயக்குநர் (கல்லூரி கல்வி) முனைவர் அ.மலர், துணை இயக்குநர் (தமிழ் வளர்ச்சித்துறை) தே.ஜெயஜோதி, டி.கே.எம். மகளிர் கல்லூரி செயலாளர் மணிநாதன், கல்லூரி முதல்வர் பானுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ அ.தி.மு.க., துணை பொதுச் செயலாளரும், வேப்பனஹள்ளி எம்.எல்.ஏ.,வுமான கே.பி.முனுசாமி இல்ல திருமணம்,இன்று (ஜனவரி 28) ஓசூரில் உள்ள ஹோட்டல் ஹில்ஸ்சில் நடந்தது. இந்த திருமண விழாவில் அ.தி.மு.க., பொதுச் செயலாளரும், எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். சட்டமன்ற உறுப்பினர்கள் அசோக் குமார், தமிழ்செல்வம், முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டி உட்பட அதிமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.




■ புதுக்கோட்டை மாவட்டம் ஸ்ரீ திருவப்பூர் முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷே விழா ஆயிரக்கணக்கானபக்தர்கள் முன்னிலையில் நடைபெற்றன புதுக்கோட்டை இளைய மன்னர் அமைச்சர் பெருமக்கள் மாவட்ட ஆட்சியர் இந்து அறநிலை துறை தேவஸ்தான அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டன



# கிருஷ்ணகிரி கலெக்டர் இடம் பி.எல்.ஏ., படிவத்தை வழங்கிய விசிக நிர்வாகிகள்

கிருஷ்ணகிரி, ஜன.29-
கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் தினேஷ் குமாரிடம் பி.எல்.ஏ., படிவத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகள் வழங்கினர்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினருமா எழுச்சித் தமிழர் தொல் திருமாவளவர் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட கலெக்டர் தினேஷ்குமாரிடம் பி.எல்.ஏ., படிவத்தை கிருஷ்ணகிரி மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகள் வழங்கினர். இந்த நிகழ்வின் போது மண்டல செயலாளர் அசோகன், முன்னாள் மாவட்ட செயலாளர் கனியமுதன், துணைச் செயலாளர்கள் தங்கத்தியாகு, ஜிம்மோகன், மாயவன், மாவட்ட செயலாளர்கள் கிருஷ்ணகிரி தமிழ்மணி, வேப்பனப்பள்ளி செம்பட்டி சிவா, பர்கூர் மாதையன், ஊத்தங்கரை குபேந்திரன், ஓசூர் ராமச்சந்திரன், தளி செல்வம், நிர்வாகிகள் முனிராவ், சிறுத்தை ராஜா, கார்த்திக், சூளகிரி தியாகு, வேங்கைவளவன், கனஜூர் முரளி, பவுன்ராஜ், மணி, ஜெகன், ஓசூர் வினோத், கணபதி, சரவணன், உள்ளிட்ட நிர்வாகிகள் பல உடன் இருந்தனர்.




# சோழபுரம் புனித ஜஸ்டின் கலைக் கல்லூரியில் மனிதநேய வார விழா

சிவகங்கை, ஜன.29-
சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் அவரது அறிவுறுத்தலின் படி சிவகங்கை உட்கோட்டம் சிவகங்கை நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சோழபுரம் புனித ஜஸ்டின் பெண்கள் அறிவியல் மற்றும் கலைகல்லூரியில் நடைபெற்ற மனித நேய வாரவிழா நடைபெற்றது.

இதில் 400 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்...

விழாவில் சைபர் கிரைம் ஏடிஎஸ்பி உதயகுமார் தலைமை யேற்க மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் முத்துலட்சுமி, சிறப்பு நீதிமன்ற அரசு வழக்கறிஞர் துஷாந்த் பிரதீப் குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் வீணஸ் ஃபவுண்டேஷன்ஸ் அ.பூமிநாதன், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு புள்ளியியல் ஆய்வாளர் கண்ணதாசன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிட, சைபர் கிரைம் எஸ்ஐ சதீஷ், கல்லூரி செயலாளர் ஸ்டெல்லா, கல்லூரி முதல்வர் பிருந்தா, சார்பு ஆய்வாளர் சேகரன் சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் ஜோதிமணி, அறிவழகன் மஞ்சுளா, பாலமுருகன் பெண் காவல் ஆய்வாளர்கள், தேவிகா பாரதி ஆகியோர் கலந்து கொண்டனர். கல்லூரி மாணவிகள் செல்வி கலையரசி செல்வி கிருத்திகா ஸ்ரீ, சிறப்புரை நிகழ்த்தினர்.

மாய்ந்து விடவில்லை மனித நேயம் பற்றிய தலைப்பில் நடைபெற்ற கவிதை போட்டியில் வெற்றி பெற்ற செல்வி வைஷ்ணவி செல்வி சோபியா கனிமலர் செல்வி விஷாலினி க்கு வெற்றிக்கோப்பை வழங்கப்பட்டது...



■ வேலூர் மாவட்ட ஆட்சியர் வே. இரா.சுப்புலெட்சுமி, அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், குருவராஜபாளையம் ஊராட்சி, புலன்காகுட்டை சாலை முதல் தர்ம கொண்ட ராஜா கோயில் வரை 2.6 கி.மீ நீளத்திற்கு ரூ.1.68 கோடி மதிப்பில் தார்சாலை அமைக்கும் பணியை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூகாஞ்சனா, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் உஷா நந்தினி, அரி, சுதாகர். குருவராஜபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, வனச்சரகர் வெங்கடாச்சலம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அதிமுக நகர செயலாளர், தொழிலதிபர் விமல் சிவப்பிரியா அவர்களின் ஜெய விலாஸ் இல்ல புதுமனை புகு விழாவிற்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அவர்களின் இல்லத்திற்கு நேரில் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் கூறினார். அதிமுக துணை பொதுச்செயலாளர், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.முனுசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அசோக் குமார், தமிழ்செல்வம், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் பரிதா நவாப் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



# ஆயக்குடியில் விசிக சார்பில் பழனிபாபா நினைவேந்தல் நிகழ்வு

திண்டுக்கல், ஜன.29-
திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடியில் சமூக நீதிப் போராளி பழனிபாபாவின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றன.

தொடர்ந்து சமூக நீதிக் களத்தில் பல்வேறு போராட்டங்களை நடத்தி சமத்துவத்திற்காக களம் கண்ட சமூக நீதிப் போராளி பழனிபாபாவின் நினைவேந்தல் நிகழ்வு ஆண்டுதோறும் அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களால் ஒன்றினைக்கப்பட்டு விமர்சையாக நடைபெற்று வருகின்றன.

இதன் அடிப்படையில் தற்போது பழனிபாபாவின் நினைவேந்தல் நிகழ்வு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் இஸ்லாமிய ஜனநாயக பேரவை தொகுதி அமைப்பாளர் சபிக் ராஜா தலைமையில் மாவட்ட செயலாளர் போர்க்கொடியேந்தி மாவட்ட துணை செயலாளர் வாஞ்சிநாதன்

அப்துல் கலாம் ஆசாத், நிர்வாக குழு உறுப்பினர் வடிவேல் ஹக்கீம் சேட் மற்றும் பாவேந்தன் ஆகியோர் முன்னிலையில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றன.

தொடர்ந்து விழாவின் சிறப்பு அழைப்பாளராக மாநில அமைப்பு செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நாசர் திண்டுக்கல் மண்டல செயலாளர் ஜான்சன் கிறிஸ்டோபர் மண்டல துணை செயலாளர் ஜலால் முகமது ஒட்டன்சத்திரம் தொகுதி மாவட்ட செயலாளர் திருவளவன் வேடசந்தூர் மாவட்ட செயலாளர் வெற்றி செல்வன் மற்றும் இவ்விழாவில் பொதினிவளவன் ஜெய்சீலன் பூமிநாதன் குமாரசாமி, சந்திரன் பிரபு, செல்லதுரை, ஆதிவளவன் தமிழன்னன், அன்பழகன், பாவலன், மணிமுத்து, அருண், இளையதுரை கார்த்தி, பிரேம், பிரகாஷ், செந்தமிழன், இரமேஷ், பார்த்திபன், கனேசன், சக்திவேல், குருநாதன், மருதமுத்து, சிவா, காட்டான்துரை உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் கட்சி கொடிகளை ஏந்தியவாறு ஊர்வலமாக வந்து பழனி பாபாவின் நிலைவிடத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து பழனி பாபாவின் புகழ் பாடும் விதமாக பல்வேறு கோஷங்களை எழுப்பியும் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியும் பழனிபாபாவின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றன..



■ செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றிய திருவஞ்சேரி ஊராட்சியில் 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.ஜனனி சுரேஷ் பாபு அவர்களின் தலைமையில் நடைபெற்றது இந்த கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் குறைகளை கேட்டறிந்து அரசு துறை அதிகாரிகளுக்கு பொதுமக்களின் குறைகளை உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊராட்சி மன்ற தலைவர் உறுதி உறுதியளித்தனர் இக்கூட்டத்தில் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் எஸ்.ருக்மணி சக்தி, நாகலிங்கம், சூரியா பொண்ணுவேல், பழனிச்சாமி என்கின்ற இமானுவேல், ஜெயசௌந்தரி ஞானசேகர், செல்வி பாபுஜி, நியமான உறுப்பினர் கே.மதுசூதனன் கிளை கழக நிர்வாகிகள் மற்றும் ஊராட்சி செயலாளர் வேலுசாமி அரசு அதிகாரிகள் கிளைக் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# கந்திகுப்பம் கால பைரவர் கோயில் அருகில் ரூ.2.47 கோடி மதிப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சாலை மேம்பாட்டு பணிகள் கலெக்டர், எம்எல்ஏ., துவக்கி வைத்தனர்

கிருஷ்ணகிரி, ஜன.29-
கிருஷ்ணகிரி மாவட்டம் கந்திகுப்பம் அருகே உள்ள கால பைரவர் கோயில் அருகில் ரூ.2.47 கோடி மதிப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சாலை மேம்பாட்டு பணிகளை கலெக்டர் மற்றும் எம்எல்ஏ., துவக்கி வைத்தனர்.


கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஊராட்சி ஒன்றியம் கந்திகுப்பம் கால பைரவர் கோயில் அருகில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக, கனிமங்களும், குவாரிகளும் 2025-26 மற்றும் தூய்மை பாரத இயக்கம் 2025-26 திட்டங்களின் கீழ் ரூ.2 கோடியே 47 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் தார் சாலை மேம்பாட்டு பணிகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், குளியல் அறைகள் மற்றும் கழிவறை கட்டுமான பணிகளுக்கு மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தனர்.



இது குறித்து கலெக்டர் கூறுகையில், கந்திகுப்பம் ஊராட்சி செங்கோடி நகர் பைரவர் கோயில் அருகில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பாக, கனிமங்களும், குவாரிகளும் 2025-26 திட்டத்தின் கீழ், கந்திகுப்பம் சாலை முதல் பைரவர் கோயில் வரை ரூ.99 லட்சத்து 73 ஆயிரம் மதிப்பில் தார் சாலை மேம்பாட்டு பணிகள், கந்திகுப்பம் சாலை முதுல் பைரவர் கோயில் வரை ரூ.85 லட்சத்து 29 ஆயிரம் மதிப்பில் தார் சாலை மேம்பாட்டு பணிகள், கந்திகுப்பம் முதுல் பைரவர் கோயில் வரை ரூ.26 லட்சத்து 86 ஆயிரம் மதிப்பில் தார் சாலை மேம்பாட்டு பணிகள் மற்றும் ரூ.18 லட்சத்து 82 ஆயிரம் மதிப்பில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கவும்,

தூய்மை பாரத இயக்கம் 2025-26 திட்டத்தின் கீழ், பைரவர் கோயில் அருகில் ரூ.15 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் 10 எண்ணிக்கைகள் கொண்ட குளியல் அறைகள், 5 எண்ணிக்கைகள் கொண்ட ஆண்கள் கழிவறைகள் மற்றும் 5 எண்ணிக்கைகள் கொண்ட பெண்கள் கழிவறைகள் கட்டப்பட உள்ளது.

இந்த தார்சாலைகள் பைரவர் கோயிலுக்கு வெளிமாநிலம் மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து வரும் பக்தர்கள் சிரமமின்றி வந்து செல்ல இயலும். மேலும், விசேஷமான நாட்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், இக்கோயிலை சுற்றியுள்ள கிராம மக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், தனியார் தொழிற்சாலைக்கு செல்லும் பணியாளர்கள், விவசாய பொருட்களை எடுத்து செல்லும் விவசாயிகள் பயனடைவார்கள் என்றார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட எஸ்பி தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, காலபைரவர் சுவாமிகள், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) க்ரிதி காம்னா, சவுமியா, தாசில்தார் சின்னசாமி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் ராஜேந்திரன் மற்றும் காந்தி உள்ளிட்ட முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.




## கீழக்கரை இஃப்ஹாம் அஹ்சானுக்கு ஆஸ்திரேலிய கல்வி தொழில்நுட்ப நிறுவனத்தின் சான்றிதழ் கௌரவம்

ராமநாதபுரம், ஜன.29-
ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையைச் சேர்ந்த எலுமினா நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான இஃப்ஹாம் அஹ்சான், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கல்வி மதிப்பீட்டு முறைகளை மறுவடிவமைத்து புதுமையான தீர்வுகள் மூலம் மதிப்பீட்டு அமைப்புகளை மேம்படுத்தியதற்காக, ஆஸ்திரேலியாவில் தொடங்கப்பட்ட முன்னணி கல்வி தொழில்நுட்ப நிறுவனம் அவரை சான்றிதழ் வழங்கி கௌரவித்துள்ளது.

இந்த நிறுவனம் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பள்ளிகள் மற்றும் அரசு துறைகளுக்காக நவீன தொழில்நுட்பத்தின் மூலம் மதிப்பீட்டு தீர்வுகளை வழங்குவதிலும், தேர்வு முறைகளை வடிவமைப்பதிலும் சிறந்து விளங்கியதாக தெரிவித்துள்ளது.

இந்த சாதனையைப் பாராட்டி லூஹா ஜுவல்லரி நிறுவனர் ஹமீத் உள்ளிட்ட பலரும், பொதுமக்கள் திரளாக வாழ்த்துகளை தெரிவித்தனர்.



## பழனியில் தவெக சார்பில் பழனிபாபா நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றன

திண்டுக்கல், ஜன.29-
திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடியில் பழனி பாபாவின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றன.


தொடர்ந்து சமூகத்தில் பல்வேறு சமூக நீதி போராட்ட களங்களில் களமாடிய பழனி பாபாவிற்கு ஆண்டுதோறும் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் தற்போது நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்ற நிலையில் தமிழக வெற்றி கழகம் சார்பாக பொதுக்குழு உறுப்பினர் பாலன் தலைமையில் கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு கட்சி கொடிகளை ஏந்தியவாறு ஊர்வலமாக வந்து பல்வேறு கோஷங்களை எழுப்பி பழனிபாபாவின் நினைவிடத்தில் மலர் தூவி மாலைகளால் அலங்கரிக் கப்பட்டு வீரவணக்கம் செலுத்தினர்.

மேலும் இந்நிகழ்வில் தமிழக வெற்றி கழகம் சார்பாக கட்சி நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பழனி பாபாவின் புகழ் பாடும் விதமாகவும் தேசிய தலைவர்களின் புகழை எடுத்துரைக்கும் விதமாகவும் பல்வேறு கோஷங்கள் எழுப்பி வீரவணக்க நிகழ்ச்சி நடைபெற்றன.

# கீழக்கரையில் அனுமதி இல்லாத உணவு சேவைகள்.! அரசு அதிகாரிகளின் மெத்தனப்போக்குக்கு

ராமநாதபுரம், ஜன.29-
ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகரில் அனுமதி இன்றி சமூக வலைத்தளம் WhatsApp குழுக்கள் மூலம் இயங்கும் உணவு மற்றும் டெலிவரி சேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இதைத் தடுக்க வேண்டிய அரசு துறைகள் போதுமான கண்காணிப்பு மேற்கொள்ளாதது பொது மக்களிடையே கடும் அதிருப்தியை உருவாக்கியுள்ளது. உணவு பாதுகாப்புத் துறை, உள்ளாட்சி நிர்வாகம், வர்த்தக வரித்துறை மற்றும் காவல் துறை ஆகியவை இணைந்து கண்காணிக்க வேண்டிய இந்தச் சட்டவிரோத செயல்பாடுகள், எந்தவித மான அனுமதியும், பதிவு முறையும் இன்றி தாராளமாக நடைபெற்று வருவது அதிகாரிகளின் மெத்தனப்போக்கை வெளிப் படுத்துகிறது என சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர். ஒரு சில பதிவு செய்யப்பட்ட, FSSAI அனுமதி பெற்ற நிறுவனங்கள் மட்டுமே உணவு பாதுகாப்பு விதிமுறைகள், சுகாதார நடைமுறைகள் மற்றும் வரி செலுத்துதல் போன்ற அரசு விதிகளை பின்பற்றுகின்றன. இதனால் அரசுக்கு வருவாய் ஈற்றி தரவும் பொது மக்களுக்கு உண்ணுகின்ற உணவில் தரம் சுகாதாரம் உள்ளிட்டவை பாதுகாப்பான முறையில் அமைகின்றது இதனால் பொது மக்களுக்கும் அரசுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் அமைகிறது. ஆனால் அரசு விதிமுறைகளை மீறி ஒரு சில நபர்கள் சமூக வலைத்தளங்களில் குழுவாக உருவாக்கி உணவு டெலிவரி செய்து வருகின்றனர் உணவுக்கு முறையான பாதுகாப்பு சான்றிதழ் பெறாமலும் டெலிவரி செய்யக்கூடிய நபர்களுக்கு முறையான ஆவணங்கள் இல்லாமலும் இருப்பது பெரும் ஆபத்து ஏற்படுகிறது சரியான அரசு வழிகாட்டுதல் இல்லாமல் சமூக வலைத்தளங்களில் குழுவை உருவாக்கி இளைஞர்களை அதில் இணைத்து எவ்வித




ஆவணங்களும் இல்லாமல் டெலிவரி செய்வதற்கு பயன்படுத்துகின்றனர் இதனால் பொதுமக்களுடைய தொலைபேசி எண்கள் பெண்கள் குடும்ப அங்கத்தினருடைய தொலைபேசி எண்கள் எளிதில் அவர்களுக்கு கிடைக்கின்றது.

இதன் மூலம் சட்ட ஒழுங்கு சீர்கேடு ஏற்பட மிகுந்த வாய்ப்பு உள்ளதாகவும் சமூக அலுவலர்கள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். மேலும், இவ்வகை செயல்பாடுகள் அரசுக்கு உரிய GST வருவாய் இழப்பையும், பணப் பரிவர்த்தனைகள் கண்காணிக்க முடியாத நிலையும் உருவாக்கி, சட்ட ஒழுங்கு சிக்கல்களுக்கு அடித்தளமாகவும் மாறக்கூடும் என எச்சரிக்கப்படுகிறது.

சிறு சிறு குடிசை தொழில்களை பயன்படுத்தி அன்றாட வியாபாரம் செய்து வரும் இல்லத்தரசிகளை இதுபோன்று தளங்களில் இணைத்து அவர்களுக்கு வியாபார சிக்கலையும் ஏற்படுத்துகின்றனர். எந்த ஒரு உணவு பொருள் தயாரிப்பு செய்தாலும் அதற்கு முறையான அரசு உணவு பாதுகாப்பு துறை சார்பில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என்பது விதியாகும் அதையும் மீறி தொழில்கள் செய்து அது எப்படி தயார் செய்யப்படுகிறது எந்த முறையில் செயல்படுகிறது என்று எந்தவித அறிவிப்பும் என்று செயல்படுவது கேள்விக்குறியாகவே உள்ளது.

இதனால், சம்பந்தப்பட்ட துறைகள் உடனடியாக இணைந்து ஆய்வு மேற்கொண்டு, அனுமதி இல்லாத சேவைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், அதிகாரிகளின் மெத்தனப்போக்கு தொடருமானால் அது பொதுமக்கள் நலனுக்கு எதிரான செயலாகவே பார்க்க ப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப் படுகிறது.

அதே நேரத்தில், பொதுமக்களும் தங்களது பாதுகாப்பை கருத்தில் கொண்டு, FS-SAI அனுமதி, வணிக பதிவு மற்றும் வரி பதிவு பெற்ற சேவைகளையே பயன்படுத்த வேண்டும் என்றும், குற்றச்செயல்களை அறிந்தால் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தகவல் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப் படுகிறது. பொதுமக்கள் பாதுகாப்பு, அரசு வருவாய் மற்றும் சட்ட ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கான பொதுநலக் கோரிக்கையே” என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.



## ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவிலில் ஆன்மீக ஒளியுடன் மகா கும்பாபிஷேக பெருவிழா

கோவை, ஜன.28-
கோவை, ஒண்டிப்புதூர் அருகே அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவிலில் மகா கும்பாபிஷேக பெருவிழா பக்தி, நம்பிக்கை மற்றும் ஆன்மீக எழுச்சியுடன் விமரிசையாக நடைபெற்றது. பழமை மற்றும் புனிதத்தைக் கலந்த இத்திருத்தலத்தில் ஸ்ரீ வைத்தீஸ்வரர் - தையல்நாயகி, நந்தி மற்றும் காலபைரவர் ஆகிய தெய்வங்களுக்கான பிரதிஷ்டைகள் செய்யப்பட்டு, திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பாக நடத்தப்பட்டது.

விழாவை முன்னிட்டு காலை மங்கள வாத்தியங்களின் முழக்கத்துடன் கால யாக பூஜைகள், விசேஷ ஹோமங்கள் நடைபெற்றன. வேத மந்திரங்கள் ஒலிக்க, புனித தீர்த்தங்கள்ஹோமக் குண்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது பக்தர்களின் மனங்களில் ஆன்மீக பரவசத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து திருக்கலசங்களுக்கு நன்னீர் ஊற்றி கும்பாபிஷேக நன்னீராட்டு விழா நடத்தப்பட்டு, இதில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்களும் தீர்த்தங்களும்அன்னதானம் வழங்கப்பட்டன.

இந்த மகத்தான பெருவிழாவில் ஸ்ரீ விக்னேஸ்வர ஸ்வாமிகளின் ஆஷ்டான வித்வாரனான ஸ்ரீ ராஜ்குமார் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம்விமர்சியாக நடத்தப்பட்டன. இதில் கோவில் நிர்வாகத்தினர், திருப்பணி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட திரளான பக்தர்கள் கலந்து கொண்டு, சுவாமி தரிசனம் செய்து இறையருளைப் பெற்றனர்.

இவ்மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, கோவிலில் 48 நாட்கள் மண்டல பூஜைகள் நடைபெற உள்ளதாகவும், அதன் நிறைவு நாளான 48வது நாளன்று லட்சுமி குபேர ஹோமம், மகா அபிஷேகம் மற்றும் அன்னதானம் நடைபெற உள்ளதாகவும் கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். இந்த நிகழ்வுகள் பக்தர்களின் வாழ்வில் நல்வாழ்வு, வளம் மற்றும் அமைதியை அளிக்கும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.




குடியரசு தினத்தை முன்னிட்டு 1500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள்

## தமிழ்சார்ந்த கரகாட்டம், மயிலாட்டம், கும்மியாட்டம் என தொடர்ந்து 10 மணி நேரம் ஆடல் பாடல் உள்ளிட்ட கலை நிகழ்ச்சி நடத்து உலக சாதனை படைத்துள்ளனர்

பல்லாவரம், ஜன.29-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் உள்ள தனியார் கல்லூரியில் கிட்ஸ் வேர்ல்ட் ஃபவுண்டேஷன் மற்றும் ரிகீதி அச்சிவர் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் இணைந்து தமிழ் தேசிய விருது 2026 என்ற தலைப்பில் தமிழ்சார்ந்த கலைகளை ஊக்குவிக்கும் வகையில் கலைநிகழ்ச்சி நடைப்பெற்றது. இதில் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை தொடர்ந்து 10 மணி நேரம் தமிழக கலையான கும்மியாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், கரகாட்டம் மற்றும் சிலம்பம், கராத்தே உள்ளிட்ட கலைகளை இன்றைய தலைமுறை யினருக்கு எடுத்து செல்லும் வகையில் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இதில் ஒவ்வொரு மாணவர்களும் அவர்களது திறமைகளை வெளிகொணரும் வகையில் சிறப்பாக ஆடினஎ.

இதில் 1500 மாணவ, மாணவியர்கள் சுமார் 10 மணிநேரம் இடை விடாது ஆடல், பாடல், நடனம், யோகா என பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தி ரிகீதி அச்சிவர் புக் ஆப் ரெக்கார்ட்ஸில் புதிய உலக சாதனை படைத்தனர். சாதனை படைத்த மாணவர்களுக்கு விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.





## காரைக்குடியில் பைக் டாக்ஸிக்கு எதிராகப் போராட்டம்: அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து பிப்ரவரியில் சிவகங்கையில் ஆலோசனை

காரைக்குடி, ஜன.29-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பைக் டாக்ஸி சேவையைக் கண்டித்து நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, தொழிலைப் பாதுகாப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூட்டம் வரும் பிப்ரவரி 7ஆம் தேதி சிவகங்கையில் முக்கியக் கூட்டம் நடைபெறவுள்ளது.

காரைக்குடியில் கண்டன ஆர்ப்பாட்டம்:

காரைக்குடியில் ஆட்டோ மற்றும் வாடகை வாகன ஓட்டுநர்கள் ஒன்றிணைந்து பைக் டாக்ஸிகளுக்கு எதிராகப் பிரம்மாண்ட ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சேவையால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், விதிமுறைகளை மீறி இயங்கும் பைக் டாக்ஸிகளை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

சிவகங்கையில் ஆலோசனைக் கூட்டம்:

இந்த போ ராட்டத்தின் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்தும், தொழிலைப் பாதுகாப்பதற்கான திட்டமிடல்களை வகுக்கவும் வரும் 07.02.2026 (சனிக்கிழமை) மாலை 3 மணிக்கு சிவகங்கை சிறிவி மாவட்ட அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.



நிர்வாகிகள் பங்கேற்க அழைப்பு:

இது குறித்து சங்கத்தின் மாவட்டப் பொதுச் செயலாளர் அ. விஜயகுமார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

“நமது தொழிலைப் பாதுகாக்கப் பெரும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்கான திட்டமிடல் மற்றும் இயக்கத்தை நடத்துவது குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகிகள், மாவட்டக் குழு உறுப்பினர்கள் மற்றும் கிளைச் செயலாளர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.”

காரைக்குடி ஆர்ப்பாட்டத்தின் தொடர்ச்சியாக இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவது, மாவட்டத்தின் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் எதிர்பா ர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.





## பழனி பாதயாத்திரை பக்தர்களுக்கு 40 ஆண்டுகளாக அன்னதான சேவை: சிவகங்கை மாவட்டம் காரைக்குடி குடும்பத்தினர் நெகிழ்ச்சி

நத்தம் ஜன29-

திண்டுக்கல் மாவட்டம் பழனி பாலதண்டாயுதபாணி திருக்கோவில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு, நத்தம் கோபால்பட்டி அருகே பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு சிவகங்கை மாவட்டம் காரைக்குடியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் கடந்த 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து அன்னதானப் பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

பாரம்பரிய சேவை:

காரைக்குடியைச் சேர்ந்த வெங்கடாசலம் செட்டியார் அலமேலு ஆச்சி ஆகியோரின் மகன்



ராமசாமி சொர்ணவள்ளி குடும் பத்தினர், முருகப் பெருமானின் அருளை முன்னிட்டு இந்தச் சேவையைத் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றனர். தைப்பூசத்திற்குப் பழனி நோக்கிச் செல்லும் பக்தர்களுக்காக, இவர்கள் ஆண்டுதோறும் பாரம்பரிய முறைப்படி ஆரோக்கியமான ‘கஞ்சி மண்டி’ மற்றும் உணவுகளை வழங்கி வருகின்றனர்.

பக்தியுடன் சமைக்கப்பட்ட உணவு:

கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றிணைந்து, பக்தியுடனும் நேர்த்தியுடனும் ஆரோக்கியமான உணவுகளைத் தாங்களே முன்னின்று சமைத்து பக்தர்களுக்குப் பரிமாறி வருகின்றனர். இவர்களது இந்தச் சேவை மனப்பான்மை இப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பக்தர்கள் வாழ்த்து:

இந்த ஆண்டும் தைப்பூசத்தை முன்னிட்டு நடைபெற்ற அன்னதான நிகழ்வில், திரளான பாதயாத்திரை பக்தர்கள் கலந்துகொண்டு உணவினை உண்டு மகிழ்ந்தனர். சேவை மனப்பான்மையுடன் பாரம்பரியமாக இந்த அறப்பணியைத் தொடர்ந்து வரும் ராமசாமி சொர்ணவள்ளி குடும்பத்தினரை, “முருகப் பெருமானின் முழு அருளையும் இவர்கள் பெற வேண்டும்“ என்று பக்தர்கள் மனமார வாழ்த்திச் சென்றனர்...



## இரத்தினமங்கலம் ஸ்ரீ கிருஷ் சர்வதேசப் பள்ளியில் அறிவியல் கண்காட்சியில் ஏராளமன மாணவர்கள் பங்கேற்பு

செங்கல்பட்டு, ஜன. 29-

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் அடுத்த இரத்தினமங்கலத்தில் உள்ள ஸ்ரீ கிருஷ் சர்வதேசப் பள்ளியில் இன்று காலை TECHNOSIUM என்ற தலைப்பில் புதுமையான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி நடைப்பெற்றது. இந்த கண்காட்சியில் ஸ்ரீ கிருஷ் சர்வதேசப் பள்ளியில் பயிலும் எல்.கே.ஜி முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் புதிய கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தினர்.

இதில் பள்ளி மாணவர்கள் ஆர்வத் துடன் கலந்து கொண்டு தங்களுடைய கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தினர். அறிவியல் கண்காட்சியினை பள்ளியின் தலைவர் டாக்டர் ஆர். கிருஷ்ண மூர்த்தி மற்றும் தாளாளர் கௌரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பார்வையிட்டனர். மாணவ, மாணவியர்கள் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்களை செய்து அசத்தி இருந்தனர்.

குறிப்பாக விவசாயிகளின் சொட்டு நீர் பாசனம், சைபர் செக்யூரிட்டி, ஸ்மார்ட் சிட்டி, சோலார் சிஸ்டம், ரோபார்ட்டிக் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. அறிவியல் மட்டுமின்றி தமிழ், ஆங்கிலம், கணிதம், சமூக அறிவியல், இயந்திரவியல், கணினி அறிவியல் மற்றும் விளையாட்டு என பல்வேறு துறைகளிலும் தங்கள் கண்டுபிடிப்புகளை மாணவர்கள் காட்சிப் படுத்தியது பெற்றோர்களை ஆச்சரியபடுத்தியது. இந்த கண்காட்சியினை மாணவர்கள் பெற்றோர்கள் என இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர்.

இந்த அறிவியல் கண்காட்சியை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பள்ளியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி பேசும்போது, ஒவ்வொரு குழந்தையின் தனி திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் இது போன்ற நிகழ்ச்சிகள் ஆண்டுத்தோறும் பள்ளியின் சார்பில் நடத்தப்படுகிறது. மேலும் வருங்கால விஞ்ஞானிகளை உருவாக்கும் வகையில் மிக சிறப்பாக அறிவு திருவிழா நடைபெற்றதாக தெரிவித்தார்.

இதில் பள்ளியின் முதல்வர் சு.சரிகா, ஒருங்கிணைப்பாளர்கள், துறை தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





## தீண்டாமைச் சுவரை அகற்றக் கோரி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முற்றுகை: விடுதலைச் சிறுத்தைகள் கட்சி போராட்டம்

சிவகங்கை, ஜன.29-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம் கழுகேர்கடை பெருமாள்புரம் கிராமத்தில் கட்டப் பட்டு வரும் தீண்டாமைச் சுவரை உடனடியாக அகற்ற வலியுறுத்தி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது.

பின்னணி:

மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழுகேர்கடை பகுதியில் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியை மறைக்கும் வகையில், ஆதிக்க சமூகத்தைச் சேர்ந்த சிலரால் சுவர் எழுப்பப்பட்டு வருகிறது. இது அப்பகுதி மக்களின் நடமாட்டத்தைத் தடுப்பதோடு, சமூகப் பாகுபாட்டை ஊக்குவிக்கும் வகையில் இருப்பதாகக் கூறி பொதுமக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

போராட்ட விவரம்:

இந்தத் தீண்டாமைச் சுவரை அகற்றி, சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு முழக்கங்களை எழுப்பினர்.

முக்கியப் பங்கேற்பாளர்கள்:


இந்த முற்றுகைப் போராட்டத்தில் விசிகவின் முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்:

* வழக்கறிஞர் வே. பாலையா (மாவட்டச் செயலாளர், மானாமதுரை தொகுதி)
* வழக்கறிஞர் வெற்றி விஜயன் (மாவட்டச் செய லாளர், சிவகங்கை தொகுதி)
* முத்துராசு (மண்டல துணைச் செயலாளர்)
* வழக்கறிஞர்_ அய்யனார் (மாநில துணைச் செயலாளர்)
* சுடர்மணி (மாவட்ட துணைச் செயலாளர்)
* கண்ணன் (திருப்புவனம் ஒன்றிய செயலாளர்)

மேலும், மாவட்ட அமைப்பாளர்கள் சேட் முகமது, வழக்கறிஞர் பாலமுருகன், விடுதலை கார்த்திக், முடிதானை பிரபு, தாமோதரன் மற்றும் தொகுதி ஊடக மையப் பொறுப்பாளர் திருமா அஜித்வளவன், கழுகேர்கடை திருமா முணியாண்டி, ஏனதி பிரபு, முடிதானை விஜய்வளவன் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் முன்னிலை வகித்தனர்.

பொதுமக்கள் ஆதரவு:

கழுகேர்கடை கிராமத்தைச் சேர்ந்த கார்த்திக், இளைஞர்கள் மற்றும் அந்தப் பகுதி பொதுமக்கள் பெருந்திரளாக இப்போராட்டத்தில் பங்கேற்றுத் தங்கள் கோரிக் கைகளை வலியுறுத்தினர். உரிய நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் போராட்டங்கள் தொடரும் என விசிக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலம் 69வது வரர்டு காமராஜ் நகரில்

## 23 இலட்சம் மதிப்பில் குளத்தை சீரமைக்கும் பணிகளுக்கு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா அடிக்கல் நாட்டினார்

தாம்பரம், ஜன.29-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலத்திற்கு உட்பட்ட 69ஆவது வார்டு காமராஜர் நகர் உள்ள குளக்கரையில் நடைபாதை அமைக்கும் பணி கண்காணிப்பு கேமரா மற்றும் சீரமைப்பு பணிகள் அமைத்துத் தர பொதுமக்கள் கோரிக்கை ஏற்று தாம்பரம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து 23 நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகள் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் கலந்துகொண்டு குளத்தில் சீரமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி ஆய்வு பணிகளை மேற்கொண்டார்.

உடன் தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் மாமன்ற உறுப்பினர்கள் , கழக நிர்வாகிகள் தேனுபுரி. முருகா, பாலாஜி. ஏழுமலை. ஜிம் மணி. வெங்கடேஷ். ஜெயச்சந்திரன். அரசு அதிகாரிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161